116—

பேருந்து நிலையம்

•2102—**திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் விரைவாக முடிக்கப்பட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருக்கோவிலூர் பேரூராட்சியில் தனியார் நிலம் அளிக்க முன்வராததால், புதிய பேருந்து நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் நகரம் வளர்ந்து வருகிற ஒரு பெரிய நகரமாகும். அமைச்சர் அவர்கள், தனியார் முன்வரவில்லை என்று குறிப்பிட்டார்கள். 1986 ஆம் ஆண்டு அந்தப் பேருந்து நிலையம் கட்டுவதற்காக ஏறத்தாழ 5 ஏக்கர் நிலம் பேரூராட்சிக்குத் தானமாக வழங்கப்பட்டிருக்கின்றது அதிலே இதுவரை பேருந்து நிலையம் அமைவதற்கு அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. போக்குவரத்துக்கு approach road இல்லை என்ற காரணத்தால் அது நடைபெறவில்லை. தற்போது அந்த approach road-க்கு—pump house-க்குச் செல்லக்கூடிய ஒரு வழி, வெளியே வரக்கூடிய வழி; அதேபோல பேருந்து நிலையத்திற்கு அளிக்கப்பட்ட இடத்திற்குப் பக்கத்தில் ஆயூரான் வாய்க்கால் என்ற ஒரு வாய்க்கால் இருக்கிறது. அது ஏறத்தாழ 40 அடி அகலம் கொண்டது, அது ஆக்கிரமிப்பிலே இருக்கிறது. அந்த ஆக்கிரமிப்பை அகற்றி, ஒரு தரைமட்டப் பாலத்தை அங்கே போட்டால், அந்த இடத்திற்குச் செல்வதற்கு வழியும் கிடைத்துவிடும்; அந்த நகரத்திலே போக்குவரத்து நெரிசல் இருப்பதை நம்முடைய அமைச்சர் அவர்களும் அறிவார்கள். ஆகவே, உடனடியாக அந்தப் பணியை மேற்கொள்வதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

2003 மார்ச் 27]

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. எம்.சி.சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க 9-7-1986 அன்று சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் சர்வே எண் 529-ல் ஒரு ஏக்கர் இருபத்தைந்து செண்டும், 529-ல் ஒரு ஏக்கர் எழுபத்தைந்து செண்டும், 530-ல் 0.10 ஏக்கரும் மற்றும் சர்வே எண் 227-ல் 0.45 ஏக்கரும், ஆக மொத்தம் 3.55 ஏக்கர் தானமாக வழங்கப்பட்டுள்ளது. போக்குவரத்திற்கு வழியில்லை என்பதாலும், அருகில் தனியார் நிலம் அளிக்க முன்வராத காரணத்தினாலும், தற்போது புதிய பேருந்து நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தனியார் நிலம் வாங்கித் தருவதற்கு வழிவகை செய்தாலும், மேலும் அந்தப் போக்குவரத்து ஆக்கிரமிப்புகளை அகற்றி, கையகப்படுத்துவதற்கு முன்வந்தாலும் அரசு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்குச் சிந்திக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிவராஜ், நிலம் கொடுத்தீர்களா? (குறுக்கீடு) நிலம் நீங்கள்தான் கொடுத்தீர்களா?

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் குடும்பத்தால் அளிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாராட்டுகள்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, அந்த ஆக்கிரமிப்பைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் வரக்கூடியது. இரண்டு, மூன்று நபர்கள்தான் ஆக்கிரமித்திருக்கிறார்கள். ஆகவே அந்த ஆக்கிரமிப்பை அகற்றி TUFIDCO நிறுவனத்தின் மூலம் கடன் உதவி பெற்று, கூடிய விரைவிலேயே பேரூராட்சிக்கு இந்தப் பேருந்து நிலையம் அமைப்பதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எம். சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் ஒப்புதலுடன் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மனு மூலம் தந்தால், அந்த ஆக்கிரமிப்புகளை

அகற்றி, திருக்கோவிலூர் பேரூராட்சி மிகவும் நெருக்கடியான பேரூராட்சி, அந்தப் பேரூராட்சிக்கு உடனடியாக TUFIDCO கடன் உதவியின் மூலமாகப் பேருந்து நிலையம் அமைப்பதற்கு அரசு வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 117, திருமதி கே. பவானி கருணாகரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

117—

தொகுப்பு வீடுகள்

***2836—திருமதி கே. பவானி கருணாகரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி, பனப்பாக்கம் பேரூராட்சியில் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திருமதி கே. பவானி கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கமல மலர்ப் பொற்பாதங்களை வணங்குகிறேன். என்னுடைய அரக்கோணம் தொகுதிக்கு உட்பட்ட நெமிலி ஒன்றியம், பனப்பாக்கம் பேரூராட்சியில், இருக்க இடமின்றி, தினக்கூலிக்கு வேலை செய்பவர்கள், வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ளவர்கள் அதிகம் உள்ளனர். மாண்புமிகு அம்மாவின் ஆட்சிக் காலத்தில் பேரூராட்சிகளுக்கும் தொகுப்பு வீடுகள் வழங்கப்பட்டன. கடந்த ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மீண்டும் மறுபரிசீலனை செய்து, பேரூராட்சிகளுக்கும் தொகுப்பு வீடுகள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவின் ஆட்சியில் வழங்க அரசு முன்வருமா என்று பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.